இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 293 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 21 – வியாழக்கிழமை 04 ஜூன் 2026 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 293 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 21- Thursday 04 June 2026 - Trichy ★★ 16 Pages ₹ 5.00





**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (03.06.2026) காலை சென்னை, கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் நினைவிடங்களில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.**

## 103–ஆவது பிறந்தநாள்: முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில்

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மலர் வளையம் வைத்து மரியாதை!

## அன்பகத்தில் தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர்

## சிலைகளைத் திறந்து வைத்து 75 அடி உயர கொடிக் கம்பத்தில் கழகக் கொடியை ஏற்றி வைத்தார்!

**சென்னை, ஜூன் 4 -**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-ஆவது பிறந்தநாள் நேற்று.**

**தமிழர்களின் நெஞ்சமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-ஆவது பிறந்தநாள் - 'செம்மொழி நாள்' நேற்று (ஜூன் 3). தமிழ்நாடெங்கும் கழகத்தினர், பொதுமக்கள் ஏழை எளியோருக்கு நலஉதவிகள் வழங்கி எழுச்சியுடன் கொண்டாடினர்.**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஜூன் திங்கள் 3ஆம் நாள். திருவாரூர் மாவட்டம் திருக்குவளை கிராமத்தில் ஒரு எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். இளம் சிறு பருவத்திலேயே சீர்திருத்தக் கருத்துகள் அவர் நெஞ்சில் வளரத் தொடங்கின. அவற்றின் அடிப்படையில் பள்ளிப் பருவத்திலேயே 'முரசொலி' கையெழுத்து ஏடாகவும், பின்னர் மாத வார ஏடாகவும், நாளேடாகவும் வளர்ந்து இன்றும் பத்திரிகை உலகில் ஓர் சிறந்த ஆயுதமாகப் பயன்படுகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரைச் சந்தித்தபின், அவர்களுடைய கொள்கைகளை இதயத்தில் ஏந்தி, அவற்றை தம்வாழ் நாள் முழுவதும் பரப்பி அவ்வழியில் இறுதிவரை வாழ்ந்தவர்.

### தமிழ்நாட்டை உயர்த்தியவர் கலைஞர்!

1957 ஆம் ஆண்டு குளித்தலைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டு, 2016 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக 13 முறை சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று வரலாற்றுச் சாதனை படைத்தவர். பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பின்பு, 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சராகப் பதவியேற்றார்.

இதனைத் தொடர்ந்து, 1971, 1989, 1996, 2006ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பணியாற்றி பல எண்ணற்ற நலத்திட்டங்களை தமிழக மக்களுக்கு வழங்கிச் சிறப்பு செய்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் 5 முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்ற காலத்தில் ஏழை எளிய மக்கள் கல்வி, அறிவியல், சமூக பொருளாதாரத்தில் முன்னேற்றம் பெற்றிட எண்ணற்ற சிறப்பான சமூக நலத்திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தி, இந்தியாவிலுள்ள மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடி மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்தினார்.

### எண்ணற்ற திட்டங்களை தீட்டியவர்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் குடிசைப் பகுதி மாற்று வாரியம், பேருந்துகள் நாட்டுடைமை, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், பெண்களுக்கு சொத்துரிமை, உழவர் சந்தை, வருமுன் காப்போம் திட்டம், நமக்கு நாமே திட்டம், மூவலூர் இராமாமிர்தம் திருமண உதவித் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பெரியார் நினைவு சமத்துவபுரம், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் போன்ற எண்ணற்ற திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தினார்.

### ஜூன் 3 – செம்மொழி நாள்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வாழும்போது வரலாறாகவும், மறைந்தும் தமிழ்நாட்டு மக்களின் மனங்களில் நிலைத்து வாழ்கின்ற அவரது புகழுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையிலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த ஜூன் 3ஆம் நாள் "செம்மொழி நாள்" என கடந்த கழக ஆட்சியின்போது அப்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் – தமிழ்நாடு அரசினால் அறிவித்து ஆணை வெளியிட்டுள்ளது.

### 80 ஆண்டுகால பொது வாழ்க்கை!

இப்படி பார்போற்றும் வகையில் தனது 14ஆம் அகவை முதல் 94ஆம் அகவை வரையில் சுமார் 80 ஆண்டுகாலம் மக்கள் பணிக்காகவே தனது வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்தவர். அப்பேற்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 ஆவது பிறந்த நாள் நேற்று!



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

### கலைஞர் நினைவிடத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மரியாதை!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

### ஓமந்தூரார் தோட்டத்தில் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்தார்!

தொடர்ந்து சென்னை அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

### முரசொலி வளாகத்தில் கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தார்!

இந்நிகழ்வினை அடுத்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் அவர்களின் மூத்த பிள்ளையான முரசொலி வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

### அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் சிலைக்கு மாலை அணிவிப்பு!

அதனையடுத்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

### அன்பகத்தில் தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைகளை திறந்து வைத்தார்!

இதனைத் தொடர்ந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வரலாற்றின் முக்கிய நிகழ்வாக, கழக இளைஞர் அணியின் தலைமையகம் அமைந்துள்ள "அன்பகம்" வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளை திறந்து வைத்து சிறப்பித்தார். மேலும் 75 அடி உயர கொடிக் கம்பத்தில் கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

மேலும் கலைஞர் அவர்களின் கோபாலபுரம் இல்லம், சி.ஐ.டி.காலனி இல்லங்களுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து வணங்கினார்.

இந்நிகழ்வுகளில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் கழக துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி, க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி. உள்பட மாவட்டக் கழகச் செயலாளர்கள், முன்னாள் அமைச்சர்கள், கழக முன்னணியினர், கழகத் தோழர்கள், பொதுமக்கள் என்று பெருந்திரளாக கலந்துகொண்டு கலைஞர் புகழுக்கு மேலும் புகழ் சேர்த்தனர்.

### தமிழ்நாடு முழுவதும் எழுச்சியோடு கொண்டாட்டம்!

இதே போன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் கழகத்தினர், பொதுமக்கள், கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு திருவுருவப் படங்களுக்கு மாலை அணிவித்தும், இனிப்புகள் வழங்கியும், ஏழை எளியோருக்கு நல உதவிகள், அறுசுவை உணவு வழங்கியும் எழுச்சியுடன் நேற்று கொண்டாடி மகிழ்ந்து கலைஞர் புகழ் பாடினர்!